1995 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று எந்த ஒரு குற்றச்சாட்டும் வரவில்லை. யாரிடத்திலிருந்தும் இப்படிப்பட்ட எந்த ஒரு கோரிக்கையும் வரவில்லை, என்பது மட்டுமல்லாமல், இப்போது நல்லதொரு ஊக்கம் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டிருப்பதினுடைய விளைவாக இந்த ஆண்டு அதிகமான அளவிற்குச் சேர்க்க முடியும் என்ற காரணத்தினுடைய அடிப்படையிலே தான், 40 சதவீதம் என்று போட்டிருந்த டார்கெட்டை விட கூடுதலாக ஆக்கப்பட்டது. ஆனால் பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறு சேமிப்புத் துறையிலே ஈடுபட்டு இருக்கிற அதிகாரிகள் ஆகியவர்களுடன் நான் கலந்து பேசுகின்றபோது, 40 சதவீதம் கூடுதலாகப் போட்ட டார்கெட்டையும் தாங்கள் நிறைவேற்றிட முடியும் என்றுதான் பெரும்பாலான மாவட்டங்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றன. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் அளவிற்கு எல்லா மாவட்டங்களும் இந்த சிறுசேமிப்புத் தொகையை ஈட்டித் தரவேண்டும் என்று டார்கெட்டை நாம் விதித்து இருந்தாலும், என்னுடைய கணக்கு, இப்போது இருக்கிற சூழ்நிலைகள், மற்றவை காரணமாக 700 கோடிக்கு மேல் இந்த ஆண்டு கிடைக்கும். இந்த மார்ச் 31 முடிந்ததற்குப் பிறகு நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவிற்குத் தாராளமாகவும் ஏராளமாகவும் பல பேர்கள் சிறுசேமிப்புத் தொகையில் கட்ட வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட பணிகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையிலோ, அல்லது ஆங்காங்கு நடைபெறுகிற வளர்ச்சிப் பணித் திட்டங்கள் மற்றவைகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையிலோ எந்த ஒரு நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களே கண்காணித்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

42—

அணியாபுரம் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

10100*—திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தாலுகா, அணியாபுரம் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த வீடற்ற நிலமற்றவர்களுக்கு வீட்டுமனை நிலமும், பட்டாவும் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் வருவாய் வட்டம், அணியாபுரம் கிராமத்தில் 23 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி உள்ளனர். அந்நிலங்கள் ரோடு புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு நிலங்களாகும். எனவே, அவற்றில் பட்டா வழங்க இயலாது. மேலும், வீட்டுமனை வழங்க வேறு புறம்போக்கு நிலங்களும் இல்லை. ஆகையால், ஆக்ரமணதாரர்களுக்கு அவர்கள் ஆக்ரமணம் செய்துள்ள இடத்திலோ, வேறு இடத்திலோ பட்டாக்கள் வழங்க இயலாது.

முற்பகல் 10-10

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வட்டம், அணியாபுரம் கிராமத்தில் கல் உடைத்து வாழ்ந்து வருகின்ற போயர் இனத்தைச் சேர்ந்த பொது மக்கள் கடந்த 100 ஆண்டுகளாக அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அது மேய்ச்சல் புறம்போக்காகவும், சாலைப் புறம்போக்காகவும் இருந்தாலும், சாலைக்குத் தேவையான 100 அடிக்கு அப்பால்தான் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அத்தோடு மேய்ச்சலுக்குப் பயன்படக் கூடிய எந்தவிதமான சாத்தியக்கூறும் அந்த இடத்திலே இல்லை. முழுவதும் குன்றுகளும் கரடுகளும் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த விதியைத் தளர்த்தி அந்தப் பகுதி மக்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுகின்றேன். அவ்வாறு வழங்க இயலவில்லை என்றாலும் மின் இணைப்பைப் பெறுவதற்கு தடையில்லாச் சான்று கொடுத்தால்கூட அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பிருக்கும். தற்போது தெரு விளக்கில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கின்றார்கள்-- ஆகையினால் தடையில்லாச் சான்று கிடைப்பதற்கும், அந்த ஊரில் நிலங்கள் இல்லாவிட்டாலும் அருகிலுள்ள அணியாபுரம், புதூர் அல்லது சீத்தக்காடு பகுதியிலே இருக்கக்கூடிய புறம்போக்கில் பட்டாக்கள் தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்புக்கு அனுமதி கொடுத்தாலே பட்டா கொடுப்பதற்குத் தயாராகிவிட்டது என்று அர்த்தம். ஆகையினால் மின் இணைப்பு கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது என்பதைத்தான்

1995 மார்ச் 17]

நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே புல எண் 32 ரோடு புறம்போக்கு, அங்கே 5 நபர்கள் இருக்கிறார்கள். புல எண் 128/5 மயானப் புறம்போக்கு, அதிலே 11 பேர். புல எண் 128/6 மந்தைவெளிப் புறம்போக்கு, 6 பேர் இருக்கிறார்கள். 218 புறம்போக்கில் ஒரு நபர் இருக்கிறார். இதிலே அதற்கு முன்பே நம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆணைப்படி மந்தைவெளிப் புறம்போக்கு என்றால் அதைத் தளர்த்திக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் ஆதிதிராவிட மக்களுக்கு அல்லது மலைவாசி மக்கள் அல்லது அத்தோடு மற்ற மக்களும் கலந்து இருந்தால், அவர்களுக்கும் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். எனக்குக் கொடுக்கப்பட்ட அந்த 23 உறுப்பினர்களில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் 6 பேர் இருக்கிறார்கள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 4 பேர் இருக்கிறார்கள். ரோடு புறம்போக்கு என்கிறபோது-- அது ரோடு புறம்போக்கு என்று இருப்பதனால்- அது ரோடிற்குத் தேவையான அளவிற்குப்போக அதிகமாக புறம்போக்கு இருக்கிறதா என்பதையும் நான் பார்க்கச் சொல்கிறேன். மயானம் என்பது இல்லாமல் மயானப் புறம்போக்கு என்பதனாலே- அது அதிகமான விஸ்தீரணத்தில்- அது மயானப் புறம்போக்கு என்ற கணக்கில் வந்தால் அதையும் பார்க்கச் சொல்கிறேன். அப்படி அந்தப் புறம்போக்கு, ரோட்டை எதிர்காலத்தில் விஸ்தீரணம் செய்வதற்கு, அதிகப்படுத்துவதற்குப் போக அதிகம் இருக்குமென்றால் அதை கவனிப்பதற்கும், மயானம் என்று இல்லாமல் மயானப் புறம்போக்கு என்று இருப்பதனாலே அதிகமான நிலங்கள் இருந்தாலும் மந்தைவெளிப் புறம்போக்கு என்றால் அதற்குக் கொடுப்பதற்கு இன்றைக்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதையும் அதற்கு வேண்டிய தனிப்பட்ட முறையில் அங்கே இருக்கிற அதிகாரிகளிடமிருந்து விவரங்களைக் கேட்டு அங்கே இருப்பவர்கள் தகுதி உடையவர்களாக, ஆதிதிராவிடர்களாக இருந்தால், மிகவும் பின்தங்கிய மக்களாக இருந்தால் அவர்களுக்கு நிலமோ, வீட்டு மனையோ வேறு எங்கும் இல்லை என்றால் அதை அனுதாபத்துடன் இந்த அரசு கவனிக்கும்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே கல் உடைக்கும் தொழிலாளி, போயர் இனத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் மிகவும் பிற்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்களும் மற்றும்

அருந்ததியர்களும்தான் அங்கே வாழ்ந்துவருகின்றார்கள். அவர்களுடைய குழந்தைகள் அணியாபுரம் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்று படித்து வருகின்றார்கள். அவர்கள் தெரு விளக்கில் படிக்கின்றார்கள். வளர்ந்து வருகின்ற நவீன காலங்களில் அந்த ரோடு புறம்போக்கில் 100 அடிக்கு அதிகமாகவே இடங்கள் இருக்கின்றன. மயானம் கிட்டத்தட்ட 20 ஏக்கருக்கு மேல் இருக்கின்றது. சாதாரணமாக 100 வீடுகள் இருக்கக் கூடிய அந்த குக்கிராமத்தில் அவ்வளவு மயானப் புறம்போக்கும், தேவையில்லாத நிலமும் இருப்பதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக அந்த மக்களுக்குப் பட்டாக்கள் வழங்க ஆவனசெய்யவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது மயானம் என்று இருக்கவில்லை. மயானப் புறம்போக்கு என்று இருக்கிறது. ஆகையினால் மயானப் புறம்போக்கு என்பதனாலே அதிக நிலம் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் முதலிலே தெரிவித்திருக்கின்றேன். அதேபோலத்தான் மந்தைவெளிப் புறம்போக்கு கொடுப்பதற்கு இன்றைக்கு இருக்கிற விதிகளைத் தளர்த்தி இருக்கின்றோம். அவைகளுக்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் போன்ற தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிப் பகுதிகளிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புறம்போக்கு நிலங்களை யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று அரசுக் கட்டுப்பாடு ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் கட்டுப்பாடுகளை நீக்கி ஏழைகளுக்குப் பட்டாக்கள் கொடுக்க வழிவகைகளை அமைச்சரவர்கள் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற நகரத்தில் நிர்வாகத்தினால் இந்த அளவிற்குக் கொடுக்கக்கூடாது என்று பொதுவாக இருக்கிறது. ஆனால் அங்கே இருப்பவர்களுடைய நிலத்தைப் பொறுத்தும் அவர்களுடைய தன்மையைப் பொறுத்தும், அவர்களுக்கு

1995 மார்ச் 17]

வேண்டுமானால் விதிவிலக்கு வைத்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 44, திரு டி. சாத்தையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

~~44—~~

இராஜபாளையம் சஞ்சீவி மலையில் மூலிகைகள்

33130—திரு. டி. சாத்தையா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் உள்ள சஞ்சீவி மலையில் மக்கள் உயிர் நலம் காக்கும் மூலிகைள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மூலிகைகளை வளர்க்க அல்லது பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பகுதி வனத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மூலிகைகளை மத்திய அரசின் ஆயுர்வேத மற்றும் சித்த ஆராய்ச்சிக்கழகம் ஆய்வு செய்துவருகிறது.

திரு. டி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில் உள்ள இந்த சஞ்சீவி மலையில், மக்கள் உயிர் காக்கும் மூலிகை மருந்துகள் அதிகமாக இருப்பதனால்தான் அதற்கு சஞ்சீவி மலை என்றே பெயர் வந்தது. இயற்கையோடு மனித வாழ்க்கை இணைந்தால்தான், இயற்கையை காத்தால்தான் மனித வாழ்க்கையையும் காக்க முடியும். அந்த அடிப்படையில் அதில் அதிகமாக உயிர் காக்கும் மூலிகைகள் இருப்பதால், அதற்கு ஃபென்சிங் போட்டு பாதுகாப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.